# நந்தா விளக்கு

(N. C. பார்த்தஸாரதி, காரியதரிசி, வேத அத்யாபக கோஷ்டி, திருவல்லிக்கேணி)

நமது கோஷ்டியின் 760ஆவது வருடக் கொண்டாட்டப் பூர்த்தியன்று (18-4-82) ஸ்ரீ ஜகதாசார்ய மஹாமஹிமோபாத்யாய பத்மவிபூஷண மஹாவித்வான் காஞ்சி பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யர் ஸ்வாமியை "சுகமினி தாள்வர் வானுலகே" என்கிற [ஸ்தல பதிகத்தின்] பலச்ருதியைப்பற்றி உபன்யஸிக்க எழுதியிருந்தேன். ஸ்வாமியின் 14—4—82 தேதிய பதிலில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

"தேவரீருடைய ஸ்ரீமுகம் கிடைத்தது. அடியேனுக்குப் பிணி ஒன்றுமில்லை. வயதிற்கேற்ற அசக்தி. ஸ்ரீ. உ. வே. T. A. T. ஸ்வாமி, பார்த்தஸாரதி ஐயங்கார் ஆகிய இருவரின் நிர்பந்தம், பிரார்த்தனைக்கிணங்க ஹ்ருதயபூர்வமாகத்தான் ஒப்புக்கொள்கிறேன். என் செய்வேன். ஒன்றும் தோன்றவில்லை, மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணனும், ஆர்மருந்தினியாகுவார் என்றவனும் வந்தாலும் என்ன பண்ண முடியும். அதற்காக நான் கோபிக்கவில்லை, வருந்தவில்லை. என்னை அன்புடன் எதிர்பார்க்கும் எல்லோருக்கும் ஸமாதானம் சொல்லுக. பார்த்தன் தன் தேர் முன் நின்றானுக்கு "தூவிரிய மலருழக்கி" பாசுரத்தை விண்ணப்பம் செய். நான் இயற்கையில் உத்ஸாஹி. இப்படி எழுதக்கூடியவனல்ல என்று உன் மனமறியும். இவ்வளவு எழுதியும் அடியேன் மனம் அங்கேதான் உள்ளது. தேவரீர்களுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்கிறேன்.

இப்படிக்கு
'அண்ணா'

அதன்படியே ஏள்ளியிருந்து சரியாக இரண்டுமணிநேரம் ஸந்நிதி திருவாய்மொழி மண்டபத்தில் வீரிய முழக்கம் செய்தார். இதில் சில காட்சிகளைக் கு காணலாம். இது மிகப்பெரிய பக்தர்களின் மத்தியில் ஸாதித்த கடைசி உபன்யாஸம் எனலாம்.

அவரைப்பற்றிச் சிலவற்றை எழு விரும்புகிறேன். உலகினர் உய்வதற்க ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ் ப்ரபந்தத்தையும், அவைகளின் விவரண களையும், ஸத் ஸம்ப்ரதாய க்ரந்தங்க யும், நாதமுனிகள் தொடங்கி மணவா மாமுனிகள் பர்யந்தம், அத்தனை ஆச யர்கள் பிரபாவங்களையும் வெளியிட்ட ப்ரஸித்தம். விசிஷ்டாத்வைத ஸித்த தத்தை வளர்த்து எம்பெருமானு தர்சனத்திற்கு ஆணிவேராக ஸ்ரீபாஷ் மும், பகவத் விஷயமும், ரஹஸ்ய க்ரந் களும், ஸ்தோத்ர பாடங்களும் விளங் கின்றன. வேதங்களும், இதிஹாச பு ணங்களும் இவைகளுக்கு ஆதாரம உள்ளன.

இவை யாவற்றையும் "ஆழியுட்பு முகந்து கொடார்த்து ஏறி" என்கிறப உபய வேதாந்தமாகிற ஆழ்கடலி ஆழ்ந்து, ஏற்பதற்கு அரியனவான க துக்களை ஏற்றுச் சிற்தேனும் பிறழா தமது மனத்திலே தேக்கி, தரம் பார பொழியும் மேகம்போல் நன்முய் யான கருத்துக்களை அவ்வப்போது வெ யிட்டுவந்த பெருமைவாய்ந்த ஸ்வா ஒருவர் இருந்தார் எனில் அது அ ஸ்வாமியைத்தான் குறிக்கும். வாய்ப் பெற்றது நம்முடைய பாக்யம். பண்டி களும், பாமரர்களும் ஏற்கும் வகை உலகினர் உய்ய மணிப்பிரவாளத் உள்ள வ்யாக்யானங்களை எளிய நடை எழுதியளித்த மஹான் அவர். இவ

"நடமாடும் நூல்நிலையம்" என்றே பலர் போற்றினர். அவரை நேராகக் காணவும், அவரது உபதேச மொழிகளைக் கேட்கும் வாய்ப்பையும் பெற்றது நமது பாக்கியம் என்றே சொல்லவேண்டும்.

நிற்க, வைணவ உலகின் பொற்காலத்தில் வாழ்ந்துவந்த பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, வேதாந்தாசாரியர், எம்பெருமானாரின் அபராவதாரமாய் விளங்கிய மணவாளமாமுனிகள் ஆகிய இவர்களை நாம் காணவில்லை. ஆனால் அவர்களது பேராற்றல் ஒருங்கே இணைந்து வ்யாக்யான சக்ரவர்த்திகள் ஆகிய அவர்கள் அத்தனைபேரும் திரண்டெழுந்து கொண்டதோர் வடிவாய் இந்த ஸ்வாமி விளங்கினார் என்பது மிகையாகாது. நாம் அவர்களைக் காணவில்லை, இவரைக் காணும் பாக்யம் பெற்றோம்.

காஞ்சி P. B. A. ஸ்வாமிக்கும், திருவல்லிக்கேணிக்கும் பலவகையில் சம்பந்தம் இருந்து வந்தது. அவ்வப்போது உத்ஸவ ஸமயங்களில் வேதபாராயண கைங்கர்யத்தில் அன்வயித்ததோடு நில்லாமல் இங்கு இயங்கிவரும் வேதவேதாந்த வர்த்தனீயில் பரீக்ஷ்யராகவும், பரீக்ஷகராகவும், உபன்யாஸகராகவும் ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் நீண்ட தொடர்பு கொண்டவர் ஆவர். 1977-ஆம் ஆண்டு எம்பெருமானார் அவதரித்த பிங்கள ஆண்டில் இம் மஹானின் நியமனத்தாலேதான் உலகம் முழுதும் மூலைமுடுக்குகளிலெல்லாம் உடையவரின் பெருமைக்கேற்பக் கொண்டாடப்பட்டது. இங்குத் திகழ்ந்துவரும் ஸ்ரீ உடையவர் கைங்கர்யசபை, பார்த்தஸாரதி ஸ்வாமி ஸந்நிதியில் உபயத்தைச் மிகச்சிறப்பாக நடத்தியதோடு எம்பெருமானார் வைபவத்தைப்பற்றிச் சென்னை நகரில் பல இடங்களில் உபந்யாஸங்கள் நடத்தியமை அனைவரும் அறிந்ததே.

அதில் 'வீனஸ் காலனி'யில் நடந்த மாநாட்டில் ஸ்வாமி கலந்துகொண்டு திருவல்லிக்கேணி வாஸிகளை வாழ்த்தியருளினார். அந்தத் திருவிழாவின் நினைவு மலர் வெளியிட்டவன்று பேரார்வத்துடன் கலந்துகொண்டு அதன் முதல் பிரதியைத் திருவுள்ளம் உகந்து அப்போதைய ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரியிடமிருந்து ஏற்றுக்கொண்ட வைபவத்தையும் இங்குப்பிரசுரித்துள்ள புகைப்படத்தில் காணலாம்.

1982-இல் நமது கோஷ்டியின் 760-ஆவது வருடக் கொண்டாட்டத்தில் நடந்த 10 நாள் உபன்யாஸங்களில், கடைசிநாள் உபன்யாஸத்தில் "மன்னு தண் பொழிலும்" என்னும் பலச்ருதி பாசுரத்தை, தனது தள்ளாத நிலையில் ப்ரவசனமே கடமையாகக்கொண்டு எழுந்தருளியிருந்து, திரளான பக்தர்களின் மத்தியில் யாவரும் வியக்கும்படி உபயஸித்தருளின ஸௌலப்யத்தை யாராலும் மறக்க முடியாது.

இவர் அருளிய க்ரந்தங்கள், எளிய நடையில் ஸாதித்த வ்யாக்யானங்கள், அவ்வப்போது சந்தேகங்கள் நிவர்த்திக்காக வெளியிட்ட நூல்கள், பல பாஷைகளில் வெளியிட்ட இராமானுசன் பத்திரிகை, இவையெல்லாம் நமது குலதனமாகும். இந்தத் தனத்தை யாவருக்கும் பயன்படுமாறு வளர்த்து, மறுபடி அச்சடித்து, பல மொழிகளில் வெளியிட்டு, ப்ரசுரங்கள் மூலமும், உபன்யாஸங்கள் மூலமும் இவர் நூல்களை ஸ்தாபிக்கச் செய்வது நமது கடமை. இவையே தமக்கு உயிராக வாழ்ந்துவந்த இந்த ஸ்வாமி என்றென்றும் நமது உள்ளத்திலே குடிகொண்டிருப்பர் என்பது திண்ணம். இவ்வாறு விளங்கிய இவர் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு நந்தா விளக்கு.